நாள் 17.03.2023.

**OS 37/2021 பிசா1 சாட்சி ஞானசேகரன் மீண்டும் அழைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

என் மீது கண்ணதாசன் என்ன வழக்கு போட்டிருக்கிறார் என்று எனக்கு தெரியும். நான் அவரிடம் கடன்வாங்கி இருந்ததாகவும் பணத்தை தராததால் பணத்தை திரும்ப பெற உத்தரவிடுமாறு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் ஆமாம். 2017 ம் ஆண்டு நான் வீடு கட்டினேன். என் வீட்டிற்கு பெயிண்ட் அடிக்க கண்ணதாசன் வந்தார். 2017 ம் ஆண்டிலிருந்து அவரை எனக்கு தெரியும். என்னுடைய வீடு 1200 சதுரடியில் கட்டப்பட்டுள்ளது. Engineer வீடு கட்டும் செலவிற்கு தோராய மதிப்பாக ரூ. 25 இலட்சம் போட்டு கொடுத்தார் ஆனால் ரூ.30 இலட்சம் செலவானது நான் வங்கியில் கடன் வாங்கினேன். நான் முன்னால் இராணுவத்தினர். நான் இராணுவத்தில் 19 ஆண்டுகள் வேலை பார்த்தேன். என் முதல்விசாரணையில் சொல்லியுள்ள என் அடையாள ஆவணங்கள் ஆதார் அட்டை, வாக்காளர் அட்டை, இராணுவத்தில் வேலை செய்ததற்கான அட்டை, வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வேலை செய்ததற்கான அடையாள அட்டை ஆகியவற்றின் நகல் வாதியால் வழக்குரையுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அவை வாதி வசம் எப்படி போனது என்றால் நான் வாதியிடம் கொடுக்கவில்லை வாதி என் வீட்டில் விட்டு விட்டு 6 மாதங்கள் வேலை பார்த்தார். அப்போது போயிருக்கும். நான் என் வீட்டிற்கு 2018 ம் ஆண்டு கிரகபிரவேசம் நடந்தது. 2017 ல் ஒரு முறை பெயிண்ட் அடித்தோம். 2018 ல் கலர் பெயிண்ட் அடித்தோம். எந்தெந்த தேதியில் எத்தனை பேர் வேலை செய்தார்கள் என்ற விவரங்களை டைரியில் குறித்து வைத்திருக்கிறேன். அதில் வாதி கண்ணதாசன் என் வீட்டில் எந்தெந்த தேதியில் வேலை செய்தார் என்ற விவரத்தையும் குறித்து வைத்திருக்கிறேன். இந்த விவரங்களை எதிர் வழக்குரையிலோ முதல் விசாரணை வாக்குமூலத்திலோ சொல்லவில்லை. வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் 11 ஆண்டுகள் வேலை பார்த்தேன். தற்போது உள்ள

வீட்டிற்கு -குடிவருவதற்கு முன்பு அண்ணாநகரில் வாடகை வீட்டில் குடியிருந்தேன். 2017 ம் ஆண்டு செப்டம்பர் 1 அல்லது 2 தேதியில் குடிவந்தேன். அப்போது பட்டி பார்த்து வெள்ளை பெயிண்ட் அடித்து குடிவந்தேன். 2018 ல் கஜா புயல் வருவதற்கு முன்பு ஒரு மாதம் இரண்டு மாதத்தில் கலர் பெயிண்ட் அடித்தோம். முதல்விசாரணை பத்தி 8 ல் சொல்லியுள்ள சங்கதிகள் எனக்கு எப்போது தெரிய வந்தது என்றால் நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தபோது தெரியவந்தது. அந்த ஆவணங்களை என் அப்பாவின் அறையில் இருந்த கபோடில் இருந்தது. என் அப்பா 2020 டிசம்பர் 4 ல் இறந்தார். என் அப்பா இறந்த பின்னர் அவரது அறைக்கு சென்று அந்த ஆவணங்களை நான் பார்க்கவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னர் என் வீட்டிலிருந்து வாதி ஆவணங்களை களவாடி சென்றதாக புகார் கொடுக்கவில்லை. இன்று வரை நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. என்னிடம் காட்டப்படும் வக்காலத்தில் இருப்பது என்னுடைய கையொப்பம் தான். புரோ நோட்டில் இருப்பது என்னுடைய கையெழுத்து மாதிரி இருக்கிறது என் கையெழுத்து இல்லை. வாசாஆ 3, 4 காசோலைகள் என்னுடைய வங்கி கணக்கில் உள்ளவைதான். காசோலைகளில் உள்ள கையொப்பங்களும் என்னுடையவை அல்ல. என்னுடைய முதல்விசாரணை வாக்குமூலத்தில் கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமும் காசோலையில் உள்ள கையொப்பமும் என்னுடைய கையொப்பம் அல்ல என முதல்விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அவற்றில் உள்ள கையெழுத்தை கையெழுத்து நிபுணரின் பரிசோதனைக்கு அனுப்பி உறுதி செய்ய நான் நடவடிக்கை எடுக்கவில்லை. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பமும் காசோலையில் உள்ள கையொப்பமும் என்னுடையவைதான் என்றும் என்னுடையதல்ல என வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன்என்றால் சரியல்ல. 12.12.2018 ம் தேதியன்று வாதியிடம் ரூ.12 இலட்சம் வட்டிக்கு நான் கடன் பெற்று இருக்கிறேன் என்றும் அசலையும் வட்டியையும் நான் கொடுக்க கடமை பட்டிருக்கிறேன் என்றும் கடனுக்கு ஆதரவாகத்தான் கடனுறுதி சீட்டை எழுதிக்கொடுத்தேன் என்றும் கடனை திருப்பி கேட்டபோது நான் காலம் கடத்தி

18.02.2020 அன்று தலா 6 இலட்சரூபாய்கு 2 காசோலைகளும் பூர்த்தி செய்து கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரியல்ல.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒம்/-) அ. மலர்விழி,

2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.